

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் 7000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 13.97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்தார். மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 332 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் நேற்று தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 164வது வார்டு, நேரு காலனி, பாகம் எண் 342ல் பாக நிலை முகவர் (BLA2) பி.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு உரையாற்றினார். உடன் பகுதி செயலாளர் என்.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், வட்டச் செயலாளர்கள் டி.ஜேசுதாஸ், ஜெ.நடராஜன், மாமன்ற உறுப்பினர் தேவி ஏசுதாஸ், கழக நிர்வாகிகள் ஆர்.ஆர்.ஜெயராம் மார்தாண்டம், சுந்தர்ராஜன், ரமேஷ், சத்யா, வெள்ளைச்சாமி மற்றும் பாக தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74வது ‘அ’ வட்டம் பாகம்–28ல் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, எண்19, கிருஷ்ணதாஸ் சாலை 2வது தெருவில் மேயர் முகாம் அலுவலகத்தில் பாகம் 28ல் பாகமுகவர் கே.பெரோஸ்கான் தலைமையில், நேற்று (10.12.2025) என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார், தகவல் தொழில்நுட்ப மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.கே.சிவக்குமார், நிர்வாகிகள் குமாரசாமி, இ.விநாயகம், வசந்த கோகுல், பிரியா மகேஸ்வரி, விஜயகுமார் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


